உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

பரமசற்குருவே துணை.

கோவை,

ஞானவம்மானை,

ஞானச்சேவல் கூவுதல்,

பரிபூரணானந்த ஞானம்,

ஞானக் கப்பல்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா தளவாய்புரம்
மௌனகுரு சுவாமிகள் மாணாக்கர்
வீரணஸ்வாமிகளெனப் பிள்ளைத்
திருநாமம் பெற்ற

பூரணானந்த ஸ்வாமிகளால்

இயற்றியது.

மெய்கண்டான் ஆண்டு 703 குரோதன ஹு மாசிமீ
ஸ்ரீவில்லிபுத்தூர்
லக்ஷிமி விலாசம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.
1926

Q2:417
N26.
17648

உ

சிவமயம்

ஓம் பரமசற்குருவே துணை

சிறப்புப்பாயிரம்

முகவூர் போர்டுஸ்கூல்

பெருமாள் உபாத்தியாயரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா

உலகிரு ளகலப் பலர்புகழ் ஞாயிறு
அலர்தரு தன்மையா னல்லதைக் காணுருக்
கண்போ லருந்துயர்க் கடத்தினிற் றம்முதற்
கண்டோ ரருண்முறை கண்டதி னடங்கியோன்
வேலா யுதன்மேன் மிகுபெரு பத்தியாற்
றேலா நூல்வேன் மாலறப் பெற்றோன்
ஒழிவி லொடுக்கத் தெளிபொரு ளுணர்ந்தோ
னிளமை துறக்க வல்லே னெனுஞ் சொலை
யிளமை யாக்கிய வியல்புள துறவோ
னிளமையில் வீரா னெனும்பெய ருடையோ
னுயர்சிவ ஞான போத முரைத்த
பொய்கண் டகன்ற மெய்கண் டானுண்
டேழு நூற்று மூன்றினி லிசைதை
யேழு மூன்றுநா ளிணைதொழு மன்பர்தம்
பாழது நீக்கிடப் பனுவலா றருகென
வேண்டுவார் வேண்டுவ விரைவட னீந்திடும்
பாண்டியன் சோம சுந்தரன் பண்பென
மும்மணிக் கோவைபு மம்மனை ஞானமும்
நன்மணி வாரணம் நாவாய்ப் பனுவலு
மெத்தகை மாற்கமு மொத்துரு தென்றே
பத்திமார்க் கத்தான் முத்திரப் பொருளையுஞ்
சித்திரித் தருளினன் றத்துவ மோனியாந்
தளவாய் புரமவ தரித்த
அளவோர் புகழ்பூ ரணனந் தடிகளே.

சாற்றுக்கவி.

தளவாய்புரம் அய்பம்பெருமாள் ந டாரவர்களியற்றிய

வெண்பா.

செய்ய தளவைநகர் சேயதனில் வீரணராய்ப்
பொய்தவிர்ந்த பின்புபரி பூரணராய் — வையகத்தோர்
சொல்லத் தவவடிவாய்த் தோன்றியடைந் தோர்வினையைக்
கல்விக் கரைக்குங் கடல்.

அம்மானை யொன்று மருட்கப்பற் பாவொன்றுஞ்
செம்மை யுறுஞ் சேவற்பாச் சீரொன்று —மும்மணிக்கோ
வையொன்று ஞானத் தொடுமீந்தார் மாந்தருளப்
பொய்யகன்று போதமுற வே.

தளவாய்புரம் தமிழ்பாடசாலை
சோமசுந்தர உபாத்தியாயரவர்களியற்றிய
எழுசீரடி யாசிரிய விருத்தம்.

திருமரு மாறன் றனயர்க டங்கள் சிருஷ்டியா மாசைசிற் றின்பம்
பருவரற்றருமென்றுணர்பசுபதியின் பத்திகொண்டிளமையிற்றுறந்தோன்
பெருமித மூர்த்தி தலமொடு தீர்த்தம் பேணியே யாத்திரை செய்தோன்
குருவருள் கொள்ளத் தலைமிசை செந்தீக் கொண்டவன் றேடுநீ ரதுபோல்

போதமெஞ் ஞான தேசிகர் தேடிப் புன்கணுற் றலைந்திடு காலை
மாதவ வேடத் தெழுந்துநற் குருவாய் வந்தடி சிரங்கண் மார் புறச்செய்
தாதரித் திருகண் ணேக்கொடு வேலு நூலுமே தரவருள் பெற்றோன்
நாதன்மெய்ப் போத வானந்த மாய நல்லபே ரின்பமே பெற்றோன்

சீர்பெறு தளவாய் நகர்தனி லுதித்தோன் சேய்தனில் வீரணனென்போ
னோர்த்வத் தாலே பூரண னந்த ராகிய நாமதே யத்தோ
னேர்பெறு ஞான மும்மணிக் கோவை யிசைபெரு மம்மனை சேவ
லார்கவி கடக்குங் கப்பலொன் றுரைத்தா னன்பர்க ளின்புறுமாறே.

அவையடக்கம்.

சொற்சுவைசே ரின்னிசைக டோன்ற திருந்திடினுங்
கற்றுணர்ந்தோர் குற்றங் கருதாரே — பெற்ற
குழவி மழலைக் குரலைக்கேட் டன்னை
யளவிலா னந்தமுற லால்.

சிவமயம்

ஓம் பரம சற்குருவே துணை

மும்மணிக் கோவை

காப்பு

நேரிசை வெண்பா

அருள்பொருந்து மின்ப வதீதமதிற் சேர்க்கும்
† மருள்வினைக ளெல்லா மகற்றிக் — குருபரனைப்
மூலத் துதித்த முதற்பொருளி னெஞ்ஞான்றுங்
காலைச் சிரமேற்றிற் கால்.

நேரிசை யாசிரியப்பா

மண்ணீ ‡ ரங்கி $ வளிவா னாகிப்
பல்லுயிர்ப் பேதப் பகுப்பைப் படைத்து
† மளித்துந் ¶ துடைத்து மறைத்து மருளியு
முயிருக் குயிரா யுணர்வுக் குணர்வாய்ப்
பிறிவற் றிருந்தும் பேருல கதனி
லொட்டியு மொட்டா தருவா யருவாய்ச்
சத்துசித் தானந் தத்தனி யாகி
யெல்லாப் பொருளி விசைந்தனை யன்றியுந்
தோன்றாத் துணையா யிருந்துட் சீவருக்
கூட்டி யுறக்கி யுபசரித் தந்தத்
தேவீ டளிக்குந் தேசிக நீயிங்
குற்றபல் லுயிற்கு முடையவ னாகலின்
பெற்றவ னீயெனப் பேசுத றகுமா
லுற்றபல் லுயிரு முன்மக வாகலி
னற்றவ சிறியே னவின்றிடின் வேறோ?
வடிமையுன் புதல்வ னாகலி னென்று
விளம்புவன் கேணீ முனம்பெரி யோர்க்கு
மலமற நீக்கி மலரடி வைத்துட்
டற்போ தத்தைத் தலைகெடவடித்து

---

† மருள் — மயக்கம். ‡ அங்கி — தீ. $ வளி — காற்று.
† அளித்து — ரட்சித்து. ¶ துடைத்து — சங்கரித்து.

வருளதி தத்தே யதுவிது வென்று
தோன்றாய் நின்றோ டொன்றவைத் தனையிங்
கென்றோ நாயெனை யிப்படி யுழல
வைத்தனை யீது வழக்கன் றைய
வன்னவர் பத்தி யளவில் லனவா
யுடனெக் கிடவே யுளங்கசிந் தன்பு
பெருகிட வென்பு முருகிடக் கண்ணீ
ராற்றி லுருமண லாற்றெனச் சுரப்ப
வென்றுந் தொழுது யேத்தின ரதனு
னன்றன் றவற்கு நல்கினோ நீயப்
பத்தியில் லென்று பகர்ந்திடி னுத
திரைகட லோடித் திரவியந் தேடும்
புயபல வீர புத்திர னென்றுங்
கைகான் மூடமாய்க் கண்கா திலனு
மூமையா யொருவ னுற்பவித் திடினுந்
தந்தைதாய் பொருளைத் தம்மிரு புதல்வற்
கொன்றுபோற் பங்கிட் டுவந்தளித் திடுவர்
தள்ளிடா ரந்தத் தன்மையைப் போல
அன்னைதந் தையினு மளவிலாக் கருணை
யுள்ளவ னெந்தாய் கள்ளப் புலையிக்
குடிலையை நம்புங் கொடியனே னென்னைத்
தள்ளா தகண்ட தற்பர ஞானச்
செல்வங் கொடுத்துன் சேவடிப் † போதி
னித்திய மாக்கி நீயெனைக்
கார்க்கக் கடனின் கழலிணைக் கழகே (1)

கட்டளைக் கலித்துறை

அழகுபொ ருந்திய நின்னடி போற்று மடியவர் பாற்
பழகிமெஞ் ஞானநூ லோதித் தெளிந்தப் படிநடந்து
கழலைச் சதமெனக் கொண்டுநின் றூயநற் காக்ஷிகண்டு
அளவிற்ப டாதசி வானந்தத் தேயென் றழுந்துவேனே (2)

† போது – புஷ்பம்.

நேரிசை வெண்பா

அழுந்திலே னின்பம தானந்தா தீதத்
தொழிந்திலே னென்சென்ம மோகோ -- நெழிந்துடலம்
‡ நாங்கூ ழெரும்பா னடுக்குண்ட வாறிங்ஙு
னேங்கினே னேழையே னே (3)

நேரிசை யாசிரியப்பா

ஏழைக் கிரங்கு மெம்பெரு மானின்
றூளைச் சதமாய்ச் சந்ததம் புரவு
மடியாற் கழியர்ப் பதமளித் தனையா
லொழியாப் பிறவி யுற்றுழன் றேங்கிக்
காண்படு பொருளிற் கருதிய ¶ நசையா
லெங்கணு மோடி யிடையா தவமே
அலைந்துநெஞ் சஞ்சே ரறிவிலி யாகி
மலத்தைப் புசிக்கும் † வள்ளுக் குன்றன்
பதத்தைத் தருவதென் றையவெம் பரனே
மலமற வைந்து புலனற மற்றுங்
கருவிக ளோயக் $ காண்பா ளுதி
யிறந்திற வாது ளிருந்த படிக்கே
யிருந்திடி லீய்வோ மென்றிடி லைய
அவனரு ளாலே யவன்றுள் வணங்கி
யென்றறி ஞோர்க ளிசைத்தன ரதனுற்
றத்துவ மகலத் தாடலை வைத்து
நித்திய மான நின்னடி சேர்க்கு
மத்திர முன்ற னடியிணைக் கன்றே
எத்தனை குற்ற மிங்கியற் றிடினு
மத்தனை குற்றமு மறிந்தநீ யாகலின்

---

‡ நாங்கூழ் — நிலப்புழு. ¶ நசை — இச்சை. † வள்ளு — நாய்.
$ காண்பானுதி — காண்பான், காக்ஷி, காக்ஷிப்பொருள்.

செற்றமுற் றென்னைத் தெருவினிற் றள்ளி
விச்சிறு வேழை யெங்ஙனஞ் சென்று
உய்ந்திடுவேனீ துரைக்குக நாத
பிறிதொன் றில்லை யாகலிற் பெம்ம
வபய மபய மையநின் பாதத்
தடைக்கலஞ் சேரு மடிமையைக்
கார்க்கும் பொருப்புன் கழலிணைக் கடனே (4)

கட்டளைக் கலித்துறை

கடனஞ் சினையுனுங் காரணத் தேவக் ‡ கனகவடி
கடினஞ் செனிமிசை வைத்தாட் புலனிக் கரணமுருங்
$கடநஞ் செனவெனு மெய்யடி யாருளங் காணமன்றி
னடனஞ் செய்புநட ராசமணிசபா ரத்தினமே (5)

நேரிசை வெண்பா

தினமே பரிந்துட் டிருவெழுத்தைந் தோதா
○ தனமே பெரிதென் றலைந்தேன் — கனவினுமுண்
ணிற்கிலே னுன்னை நினைவறநி னைத்திடக்
கற்கிலே னிக்கொடியன் காண். (6)

நேரிசை யாசிரியப்பா

காண்டற் கரிய கற்பகக் கனியே
தெள்ளிய ஞானத் தீஞ்சுவைக் கரும்பே
நல்லவர் காணும் நட்புடைக் கடலே
யறிவுக் கறிவா யமலமா யென்றும்
பிறிவற் றிருந்த பெருஞ் செல்வக் குன்றே
நினைப்பற நினைந்தோர் நினைவுக்கு ணின்று
வொளிர்த்திடு சுடரே வொருதனி முதலே
எளியனேன் கனவி லிறைதரு வாக

‡ கனகம் — பொன். கனகம், அடிகள், தினம். என்று பிறிக்க
$ கடம் — உடல். ○ அனம் — அன்னம்.

வன்பே சொரூப மாயெழுந் தருளிப்
பெண்ணெனு மாயைப் பேயை விரட்டி
யன்னதைச் சேர்ந்த வாணவ மகற்றிப்
பேசா வெனவே பேசிக் கரத்தை
யிரு¶ தோ டலையி லிசைத்தனை யன்றியும்
○ தாடலை வைத்துத் தழுவியே மைந்த
வஞ்சே லஞ்சே லாட்கொண் டடிமை
கொண்டோ மென்றுங் கூறினை யொளிருங்
கண்விழிச் சாடை காட்டிக் கண்ணை
விண்வெளி யூடு * விரவென் றருளினை
யன்னையை யனைய வையநின் னருளா
னின்மல மாய நீர்சுளிப் பாட்டிப்
பிரணவ மொன்றே பெரும்பொரு ளென்று
நாத முதித்த நல்லிடங் காட்டி
யோக முறையை யுரைத்தனை யன்றியு
மெல்லாப் பொருளு மிசைந்திடு மென்று
வேலும் நாலும் விரைந்தளித் தனைமற்
றுன்று ஞான வுயர்வெளி தன்னிற்
சுகஞ்சுகா தீதமிது வெனச் சொல்லித்
தானெனு முனைப்பைத் தலைமே லெழுகா
வாறு பதந்தை வைத்தழுத் தினைமற்
றெல்லா வுயிரைத் தானீ பார்த்தும்
பல்லுயி ருன்னைப் பாரு வாறு
திரையிட் டாடுஞ் சிதம்பர ரகசியம்
மற்றோர்க் குரையா வாறென் † றறைந்தும்
நானீ யொன்றென் றேவுரை நவின்று
மிப்படி நாத விசைத்தன பலவே

¶ தோள், தலை—தோடலை ○ தாள், தலை — தாடலை. * விரவல் —கலத்தல்.
† அறைதல் — சொல்லுதல்.

யத்தவிங் கவ்வா றனுபவம் நாய்க்கெள்
ளத்தனை நினையி னத்தனை யேனு
மிலை ‡மற் கடக மனம்பின் விரைந்தஞ்
ஞானக் காட்டை நாடியே பஞ்சப்
புலனெனுங் கொம்பிற் றாவிப் புகுந்து
விடய *நஞ் சஞ்சேர் மிகுகனி யருந்தி
அறியாமை யிருள்வந் தடைந்திட மடமை
குடிகொண் டெங்குங் குதித்துக் குதித்து
வினைவழி சென்று மேனியு மெலிய
ஆசா பாச வலையகப் பட்டு
பரிதவித் துழலும் பரிசீ தென்னோ
ஆண்டா னீயுன் னடிமையா னன்றோ
வடைக்கலம் புகுந்த வடிமையைத் தள்ளா
தருட்செயிற் பெருமை யாண்டாற் கன்றோ
பார்த்தவர் நகைக்கும் படியிப் புவியி
லலைந்திட விட்டி டாமலே
முற்றிலுங் காக்க முறையிட் டனனே.

கட்டளைக் கலித்துறை

இட்ட முடன்றனி யேகா ஞதிக ளேதுமிலா
வெட்ட வெளிதனி லானந்த மாமருள் வெள்ளமதைத்
தொட்ட படிமுனைப் பேயெழு காதுசும் மாயிருக்கு
நிட்டை தனிற்சதா நின்றிடு மாறரு ணித்தியனே. (8)

நேரிசை வெண்பா

நித்தியமா யுள்ள நிமலனே யின்றுனது
சித்தமுகந் தாளத் திரும்புவாய் — சுற்றிப்
பருந் †துந்தித் குஞ்சதனைப் பற்றிடுமா றேமன்
விருந்துக்கா காமுன்ன மே. (9)

‡ மற்கடகம் — குரங்கு. * நஞ்சம் — விஷம். † உந்தி — எழுந்து.

நேரிசை யாசிரியப்பா

முன்ன மொருவன் முனிந்து $சா பத்தாற்
புடைத்தன னொருவன் பொருந்தக் காலான்
மிதித்தன னொருவன் வீசினன் பிரம்பாற்
பரவைபா லொருவன் பகாத் தூதா
யனுப்பினன் கல்லா லடித்தன னொருவன்
மக்கண்மே லாசை பொருந்திய மாதா
வைச்சிறு † சேய்கள் வசைசொலி யடித்தும்
பற்பல குற்றஞ் செய்யினும் பரிந்து
கட்டி யணைத்துக் களிப்பன போலுஞ்
சிவர்கண் மீது திருவுளங் கனிந்த
காரண வன்னை தகப்பனு மாகலி
னடித்து மிதித்து மடிமைபோ லேவற்
செலுத்துஞ் செய்கை செய்தவற் கெல்லா
மருட்பொழிற் றின்ப வகண்டவீ டதனை
‡ யளித்தனை யென்னை யன்பிலா னெனவே
புறத்திற் றள்ளப் படாதெம் பூரண
வுனைப்பிறிந் தெங்கு * முய்வழி யிலையா
னட்புடைப் பொருளே நாயினேன் றனையும்
பட்சம்வைத் தாளப் பரமுனக் கன்றோ
*$ காரெனத் திரண்டு கருணையைச்
சீருறப் பொழியுஞ் சிவபெரு மானே. (10)

கட்டளைக் கலித்துறை

பெருமா னவனடி யார்க டெரிசிக்கப் பேரம்பலம்
வருவா னவனிரு காற்சிலம் போலிட ¶ மாசில்வெளி
யுருவா னவனி மலமா னவனூ றுறக்கமில்லாத்
திருவா னவனுட் குயிரா னவனஞ் சிவகொழுந்தே. (11)

$சாபம் – வில். † சேய்–பிள்ளை. ‡ உளித்தல்-கொடுத்தல்.
* உய்தல் பிழைத்தல். *$ கார் மேகம். ¶மாசு, இல்–குற்றமில்லாத.

நேரிசை வெண்பா

கொழுந்தாருஞ் சோதிநங் கோதிலா ருள்ளங்
குளிந்தாரு மின்பங் கொடுத்துத் -- தெளிந்தாரு
மத்து விதஞ்சேர்க்கு மையன் சபாபதியை
யொத்துண்டோ * தேவிங் குரை. (12)

நேரிசை யாசிரியப்பா

உரைமன மணுகா வொருதனிச் செல்வ
வேண்டுவர் வேண்டும் வேண்டிய வற்றை
மனமுவந் தளிக்கும் வள்ளணீ யாகலின்
சிறியே னின்பாற் செப்புவிண் ணப்ப
மொன்றுள தந்த வுரையேற் றருளி
நன்றின் றெனக்கு நல்குக நாத
வென்னெனி லிங்ங னியம்புவ னேழை
புலன்வழி சென்று மலமுறு மாயை
விடயச் சேற்றை விருப்பொடு மருவித்
† துய்த்திடு மடமைத் துட்டக் கருவியை
மரக்கா றன்றின் ‡ மாண்பெரு நாழி
புரியுழக் காழாக் கொடுங்கிய போல
புறத்தலை வதையுட் புறத்திற் செலுத்தி
புலன்பொறி மற்றும் பொருந்திய கருவி
யொன்றினு ளொன்று யொடுக்கியுஞ் சீவ
தற்போ தத்தின் றலையொழு காதுள்
¶ ளனிலஞ் சேரா $ வகலதைப் போலு
முற்றதோர் சுவரி * ஞோவியம் போலும்
வான்றிகழ் நெடிய † வரையைப் போலும்
பதைத்தலை யெழுகாப் ‡ பரவையைப் போலு

* தே — தெய்வம். † துய்த்திடுதல் — நுகர்தல். ‡ மாண் — மாக்ஷிமை.
¶ அனிலம் — காற்று. $ அகல் — விளக்கு. * ஓவியம் — சித்திரம்.
† வரை — மலை. ‡ பரவை — கடல்.

மசைவில தகண்ட வரும்பெரு வெளியைப்
பார்த்ததைப் பார்த்த படியே யிருந்து
கண்ணும் விண்ணுங் கலந்தது போலக்
கலந்துற வாகிக் காண்பா ருகி
யிறந்திற வாத யேகபோ கத்தே
யின்பந் துய்க்க வின்றரு ளைய
வன்பினி னிறைந்த வரும்பெரும் பொருளே
நம்பிய சிறிய நாயினேற் குன்றன்
மலரடி யல்லான் மாண்பெரு
முலகினிற் றுணையா ருரைசெய் குகவே. (13)

கட்டளைக் கலித்துறை

குகனைப் * பயந்தவட் பங்கநி னுடகக் † கோதிலடி
புககட் கருணைக டாக்ஷித்தா ளாவிடிற் பொய்யுளயான்
சுகமுற் றிடுவதென் றெங்கணு மோங்கிய சோதியே ‡ சிற்
ககனத் திடைநட மாடிய மாசிலாக் காரணனே. (14)

நேரிசை வெண்பா

காரணனு யென்றுங் ககனமுத லெவ்வுயிற்குந்
தாரகமாய் நின்றூட்டுந் தன்மையாற் — பூரணநீ
யில்லா யிடமுண்டோ வெல்லா முனதானு
னல்லாய்நான் வேறூ நவில். (15)

நேரிசை யாசியப்பா

நவின்றிடி லைய நலந்திகழ் ¶ குழவி
தனைப்பிற ரொருவர் தானடித் திடிலோ
விழிநீர் சொரிய விம்மி விம்மிச்
சத்தமிட் டன்னை தந்தையை நோக்கி
யழுதிடு மல்லா லன்னவர் தம்மை

* பயந்த — பெற்ற. † கோது,இல் — குற்றமில்லாத.
‡ சித்ககனம் — ஞானகாசம். ¶ குழவி — குழந்தை.

யெதிர்த்தடித் திடவே யியலுமோ வியலா
குழவியி னெடிய குரலைக் கேட்டு
வன்னை தந் தையர்வந் தன்னியர் தம்மைத்
தண்டித் தகற்றித் தன்றிருப் புதல்வற்
கின்புற் றிடவே யினியவை புகன்று
மணைத்தா னந்தத் தழுத்துவ ரைய
அன்னது போல அறிவிலாக் குழவி
யென்னைத் தேடார்ந்திட் டிழுத்தடித் தாண
வங்க ளதனின் வசப்படுத் தித்தீக்
காமக் கனலை விளைத்துட் கருக்கித்
துன்புற் றியவத் துக்கத் துடைந்து
கண்ணீர் சுரப்பக் கசிந்துள் ளுருகி
நெக்கிட நின்னை நினைப்பதல் லாலிங்
கிச்சிறு வேழை யேனொரு வாற்று
லன்னவை தம்மை யகற்றிட வசமோ
ஏங்கிநின் றுரைத்த வென்மொழிக் கிரங்கி
பரிவொடு வந்தப் பற்றைய கற்றி
யன்னைதந் தையினு மகலாக் கருணை
யன்ப விரைந்திங் கறிவிலி யென்னை
யணைத்தரு ளானந் தத்தமு தூட்டி.
நீங்கா யோக நிறைதொட் டிலிலே
தூங்காத் தூக்கந் தூங்கிச் சொக்கிச்
சும்மா யிருக்குஞ் சுஸ்த்திர
மம்மையே வப்பா வடியேற் கருளே

கட்டளைக் கலித்துறை

அடியாற் கெளியவ ரம்பல வாணரென் றன்றுகொற்றங்
குடியாற் கெழுதிய நாதநி னுடகக் கோதிலடிக்
கடியாற் கடியவ னும்படி நீயென்ன யாண்டருளப்
படியார்த் தெழுந்திரு பாதார மேதினம் பாவிப்பனே (17)

நேரிசை வெண்பா

பாவிக்கச் சுத்தப் பரமசிதா காசவெளி
சேவிக்கச் சிந்தை செலுத்தியே — * யோவியத்தைப்
போனிருத்தி யுள்ளெழுதற் போதத்தை நீக்கியே
நானிறக்க வென்றுவரும் நாள். (18)

நேரிசை யாசிரியப்பா

நாட்கொடு போவ † திந்து ¶ ஞா யிறுமாற்
காலன் பாசங் கதிதருஞ் சுழிலே
யாகலின் $ புலிக்கா லறைப் ** பாம் பிருவர்
சொல்லின ரந்தச் சூக்ஷ்ம தறிந்தே
தென்றிசை யிடையுஞ் சேர்வட திசையைப்
பிங்கலை யென்றும் பேசரி தாய
திகழ்சுழி முனையைச் சிதம்பர மென்றுங்
கண்டு தெளிந்துட் கருதிய தவத்தாற்
கனகவம் பலத்தே காலினை மாற்றி
நடநீ யியற்றந் நாதமா மொலியைக்
காதினிற் கேட்டுக் களித்தா னந்தத்
தேனினை யுண்டு தேக்கித் திளைத்துப்
பரவச மாகிப் பகரற் கரிய
வொளிநின் னடியி லொன்றின ரன்றோ
பாசங் காலன் $ பானுடு ‡ மதியா
விடக்கா லேற்றி ○ யிரவியின் மாற்றி
நடுத்தீ பகமாம் நற்சுழி முனையின்
வழிசிர மேற்றும் வகையறி யேனு
னென்றைய நினது யிருபா தத்தைச்
சிரமதி லேற்றித் தெரிசிப் பேனோ

* ஓவியம் — சித்திரம். † இந்து — சந்திரன் ¶ ஞாயிறு — சூரியன்.
$ புலிக்காலர் — வியாக்கிரமபாதர். ** பாம்பு — பதஞ்சலியார்.
$ பானு — சூரியன். ‡ மதி — சந்திரன் ○ இரவி-சூரியன்.

இடகலை செல்லா திசைக்குமி யோகிக்
கெமனிலை யென்றே யியம்புதற் காகத்
தென்றிசை நோக்கிச் சிற்சபை தன்னி
லிடக்கா றூக்கி யிமையவர் போற்ற
நாடக மாடிய நாதமெய்ப் போத
காலனை யிடது காலா லுதைத்த
கால கால கரும்புவிற்
காமனை நீற்ற கண்ணுதற் பொருளே. (19

கட்டளைக் கலித்துறை

பொருளான நின்னடி போற்றுகி லேனிந்தப் பூவுலகப்
பொருளாசை யைப்பெரி தாயுள மெண்ணிப்புன் மங்கையர்கண்
மருளான லீலையிற் சேருவ தேமுத்தி மார்க்கமென்று
மிருளான தையொளி யாமென வெண்ணினே னேழையனே (20)

நேரிசை வெண்பா

ஏழைக் குடிநாயே னெம்பெருமா நின் * றூய
தாளைப் புகுந்தேன் சரணமாய் — வாழக்
கடைக்கணருள் வாயோ கடைப்பிறப்பி லென்னைப்
படைப்பாயோ வுன்றன் பரம். (21)

நேரிசை யாசிரியப்பா

பரமசற் குருவே பசுபதிப் பொருளே
நேக்கற நோக்கும் நுண்ணிய றறிவி
னீக்கற நின்ற நிறைசுடற் கொழுந்தே
வுள்ளதா யென்று முளதனி முதலே
பிறப்பிறப் பில்லாப் பெருநிதிக் குன்றே
வரவுபோக் கில்லா வான்பெருங் கனியே
தன்படி யேதான் றளிர்த்திடு † தருவே
வொப்புக ளில்லா தோங்கிய ‡ பொருப்பே
வுள்ளும் புறமு முவந்தநன் மணமே

* தூய—பரிசுத்தமான. † தரு—விருட்சம். ‡ பொருப்பு—மலை.

அமிழ்தினு மினிய வருஞ்சுவைப் பேறே
வுள்ளன் புடையா ருடலுரு கத்தித்
தித்திடு கரும்பே திகழ்வா னொளியே
கண்ணதி லொளியாய்க் கலந்திடு முறவே
பற்பல சீவரின் ¶ பவரோ கத்தைப்
$ பொன்றிடச் செய்யும் புகழ்மா மருந்தே
வித்தினுள் வித்தாய் விளைதரு முளையே
வெளிக்குள் வெளியாய் விரவிடு வெளியே
யொளிக்கு ளொளியா யுற்றிடு மொளியே
சமயங்க டோறுந் தனித்தனி நாமம்
வசத்துள் ளன்பாய் வணங்கிப் பரவி
யெவரெவ ரெங் ‡ தே வெந்தே யென்கினு
மவரவற் கப்படி யமர்ந்தநற் றிருவே
யெல்லா மாய வீசநின் பெருமை
யறிவா ரறிவா ரறிவறி வாலே
யறியா ருன்னை யறிவரோ வைய
அறிவிலி யடியே னறிந்திட வசமோ
பற்பல கருவி படைத்திருப் பினுமங்
கோட்டுவோ னின்றே லோடா தியந்திர
மன்னது போலிங் காட்டுவோ னீயே
எள்ளள வேனு மென்செய லின்றே
யென்செய லியாதொன் றென்றதா லெந்தாய்
புல்லறி வுளநாய் போன்றவிக் கடைய
னென்றனைக் காவென் றியம்பிட வேண்டுமோ
வெல்லாம் வல்ல விறைவனீ யாகலி
னெப்படிச் சித்தத் தெண்ணமோ
வப்படி யேசெய் தாண்டரு ளைய. (22)

கட்டளைக் கலித்துறை.

ஆண்டவ னீயுன் னடியவ னனீ யறிவித்திடக்
காண்டவ னனீ பதஞ்சிரம் வைப்பவன் காண்பலரைப்
பூண்டவ னனைய பூரண காரணப் பொன்னம்பலந்
தாண்டவ மாடிய பொன்மணி யேயெஞ்ச பாபதியே (23)

¶ பவரோகம்—பிறவிநோய். $ பொன்றிட—அழிந்திட. ‡ தே-தெய்வம்.

நேரிசை வெண்பா.

சபாபதியே பெற்ற தகப்பன்று மென்றுஞ்
சபாபதியின் பேரருளைச் சார்ந்தே—சபாபதியே
விண்சுரப்ப நின்றருளை மென்மேல் வழங்குநெஞ்சே
கண்சுரப்ப நின்றழுதக் கால் (24)

நேரிசை யாசிரியப்பா.

காலடி தூக்கிக் கனகவம் பலத்தே
நாடக மாடும் நாதநின் னன்பர்க
ளைந்தெழுத் தோதி யன்புரு கிடவே
யென்றும் மறவா தேற்றினர் சிலரே
நாசியிற் புருவ நடுவினி னுட்டம்
நுண்ணிய வறிவோ டுற்றுற்று நோக்கி
ளொளி 1 கண்டத்தி லொடுங்கினர் சிலரே
ஆறு தாரத் தங்கங்கு னுட்டம்
வைத்தசை யாது வாழ்குனர் சிலரே
அடிமூ லத்தி 2 னங்கியைக் 3 காலா
லெழுப்பிச் சிரத்தி 4 னிந்தமிர் துண்டு
வொழித்துட் பசியை யொடுங்கினர் சிலரே
5 இரேசக பூரக கும்பக மாகவே
6 அனிலத்தை யுண்டு வடங்கினர் சிலரே
அண்ணு வின்னே ராக்கிபம் மனத்தை
வுச்சியி னுட்டம் வைத்தங் கொளிரும்
வெளிக்குள் வெளியாய் விரவினர் சிலரே
உதித்த யிடத்தி லொடுக்கி மனத்தைப்
பதித்தங் கின்பம் 7 பருகினர் சிலரே
கருவிக ளிறக்கக் 8 ககனம் போல
சும்மா யிருந்து சுகித்தனர் சிலரே
சென்றுசென் றணுவாய்ச் சிவதற் போதக்
தேய்ந்துநின் னடியிற் சேர்ந்தனர் சிலரே

---

1 கண்டு, அதில், என்றுபிறிக்க. 2 அங்கி—அக்கினி. 3 கால்-பிராண வாயு. 4 இந்து அமிர்தம்—நிலா அமிர்தம். 5 இரேசகம், பூரகம், கும்பகம், என்பனமுறையே சுவாசத்தை விடுதல், வாங்குதல், நிறுத்துதல். 6 அனிலம்—காற்று. 7 பருகினர்-துய்த்தனர். 8 ககனம்-வெளி.

மடைக்கொக் கதுபோன் மனமசை யாது
சிதாகா சத்தே தெளிவுற நிருவி
யுள்ளும் புறமும் பூரண வுருவாய்க்
கண்டப் பொருளிற் கலந்தனர் சிலரே
பனிவெயில் காற்று பசிமுத லாய
பற்பல துன்பப் பட்டிடை யாது
வன்பர்க ளிப்படி யாயபல் யோகம்
புரிந்துநின் னடியிற் பொருந்தின ரடியே
னுண்டுறங் குவதே யோகமென் றுழன்று
தவப்பொழு தில்லா தவப்பொழு தாக்கிக்
காலனுக் கிரையா யாகவோ கர்த்த
வுருவமைத் தென்னை விட்டதிவ் வுலகிற்
போதுமிங் குழன்றது பூரண நின்னடி
பணிமெய்த் தொண்டர் குழாத்திற் பாவி
நின்னடி போற்றும் நிட்டையைக் காட்டிச்
சின்னவ னென்னைச் சிறந்தாண் டிடற்கு
இன்னரு ளிடியொடு மேகந் திரண்டு
பொன்றிடாப் பொழிவபோற் பொழிக
வென்முகம் வாடு மியல்பதைக் கண்டே. (25)

கட்டளைக் கலித்துறை.

1கண்டோ 2டனம்3பயந்தேனெனு4மென்மொழிக் கன்னியர்கள்
5கண்டோடனமிழந் 6சேல்7 வரை பந்தென்னுங் காசுநிய தாய்க்
கண்டோ டினனத னாற்படுந் துன்பங் கணக்கிலையாற்
8கண்டோண் டினற்கருளீசா வெனையுநீ காத்தருளே (26)

நேரிசை வெண்பா.

கார்க்கப் பொருப்புன் கழலிணைக் கல்லான்மற்
றூர்க்கப் பொருப்பா மகலாம—னோக்கறவுண்
ணோக்குவா ருள்ளமதை நோக்கிப்பே ரின்பமுண்
டாக்குமா னந்தபா தா (27)

---

1 கண்டு—கற்கண்டு. 2 அனம்—அன்னம். 3 பயம்—பால். 4 மெல்—மெல்லிய. 5 கண், தோள், தனம், என்று பிரிக்க. 6 சேல்—மீன். 7 வரை—மலை. 8 கண்தோண்டினர்- கண்ணப்பர், விஷ்ணு, முதலியோர்.

நேரிசை யாசிரியப்பா.

பாதம் பரவும் பக்தர்க ளுணவே
எதுங் குறையா திருந்திடு மமுதே
கற்பூ ரத்தைக் கன லுண் குவபோன்
மெய்த்தவர் குழாத்தை விழுங்கிய சுடரே
நோக்கா நோக்காய் நோக்குவா ருள்ளம்
நோக்கிவீ டளிக்கும் நுண்ணிய வறிவே
அறிவிலி யடியே னுகம வேத
மாராய்ந் தறிபே னறிந்தவ ரோடு
பழகியு மறியேன் பதியெழுத் தோதி
மகிழ்ந்திட வறியேன் மனமற் றென்றுஞ்
சும்மா யிருக்குஞ் சூஸ்திர மறியே
னின்னடி கூடும் நெறியொன் றுமறியே
னென்று மறியா வுலுத்தநா யனையேன்
மாமயி லாட வாரண மதுபார்த்
தாடிய போல அறிஞர்கண் முன்னே
பாவிசைத் துன்னைப் பணிந்தன னென்று
யிலக்கண மிலக்கிய மிசைதொட ரெழுத்து
வல்லின மெல்லின வகையறி யேனுன்
பாவிசை யில்லாப் பகர்ந்தன னாயினுங்
குழவியின் மழலைக் குரலைக் கேட்டு
மிதுகளி கூர்ந்து விரைந்தெடுத் தன்னை
மார்போ டணைத்து மகிழுவ போல
வென்புன் சொல்லை யினிகேட் டருளி
யணைத்தா னந்தத் தமிர்தூட்டி
யெனைக்கா ரைய விறைபர தேவே (28)

கட்டளைக் கலித்துறை

தேவர்க ளையக வாதியு மந்தமுந் தேடரிய
மூவர்க ளையக தோற்றுச ராசர மூவுலகிற்
சீவர்க ளையக வன்பொடு தேடிடுஞ் செல்வமகான்
பாவர்க ளையக வேற்றரு ணீயிந்தப் பாவினையே. (29)

நேரிசை வெண்டா

வினையகற்று மாமாயை விட்டோடச் சிந்தை
நினைவகற்றும் வெம்பிறவி நீண்ட—தனையகற்று
நித்தியமா யுள்ள நிகரில்லா வீடளிக்கு
மத்த னெங் கோனின் னருள். (30)

மும்மணிக்கோவை முற்றிற்று.

உ

சிவமயம்

ஓம் பரம சற்குருவே துணை.

ஞானவம்மானை.

அந்தமுமா தியுமில்லா வகண்டபாஞ் சோதியினைச்
சந்ததமும் போற்றியன்பாய்த் தாள்பணிவோ மம்மானை
சந்ததமும் போற்றியன்பாய்த் தாள்பணிவோ மாமாயின்
வந்தடைந்தாற் கென்னபலன் ¶ வழங்குவர்கா ணம்மானை
மாறாத பேரின்ப வாழ்வதுகா ணம்மானை. (1)

பொன்மண்ணி னாசை பொருந்தி யுடல்வருந்த
வென்னாளுந் துன்ப விடர்செய்யு மம்மானை
யென்னாளுந் துன்ப விடர்செய்யு மாமாயின்
முன்னமதை விட்டிடற்கோர் முறையிலையோ வம்மானை
மோகமறும் † முன்பின்னை முயன்றறியி லம்மானை. (2)

பெண்ணாசை யென்னுமொரு பித்தங் கிருகிரெனத்
தன்னாலே தானாட்டித் தலைசுற்று மம்மானை
தன்னாலே தானாட்டித் தலைசுற்று மாமாயின்
எண்ணாது விட்டிடுத லெப்படியா மம்மானை
யுண்ணாடிப் பார்க்கி லொழியுங்கா ணம்மானை (3)

தொழிற்பெண்ணா ராதி*நசை தோய்ந்திருந்த தானினைவின்
வழியாகச் சொற்பனத்தும் வந்தமையு மம்மானை
வழியாகச் சொற்பனத்தும் வந்தமையு மாமாயின்
சுழிவாக நீக்கிடற்குத் தொழிலுளவோ வம்மானை
சுழிநாடித் தூங்கிடிலோ தொடர்ந்திடா தம்மானை. (4)

$ தனுவாதி நான்கினிலுந் தானெனதென் றேமயங்கித்
தினமுழன்று நின்றதனாற் சென்மம்வந்த தம்மானை
தினமுழன்று நின்றதனாற் சென்மம்வந்த தாமாயின்
எனதுயா னென்பதிலா திருப்பதெவ்வா றம்மானை
ஈச னுடைமையென வெண்ணிவிலை யம்மானை. (5)

¶ வழங்குதல்—கொடுத்தல் † முன்பின்னை—செல்வம் முன்னும் பின்னும்நிலையாமையைவிசாரித்தல். * நசைதோய்ந்து—இச்சையில்பதிந்து
$ தனுவாதி நான்கு—உடல், கரணம், புவனம், போகம்.

எத்தனையோ துன்ப விடர்வந்த தானாலுஞ்
சித்தமது மாறுத் திடம்வேண்டு மம்மானை
சித்தமது மாறுத் திடம்வேண்டு மாமாயின்
அத்திடம மைந்திடுத லெப்படியா மம்மானை
யதுவுமோர் நன்மையென வறியிற்றிட மம்மானை. (6)

துக்கந் தருமாயைத் தொந்தமென் றுஞ் சாராமற்
சிக்கெனவே வைராக்யத் திடம்வேண்டு மம்மானை
சிக்கெனவே வைராக்யத் திடமில்லை யாமாயின்
மிக்கக் கெடுதிவந்து விளையுமோ வம்மானை
வீடுகட்டித் தீயிட்ட வேடிக்கைதா னம்மானை. (7)

கள்ளமல மாயை கருதிற் சினேகிதர் போன்
மெள்ளமெள்ள வந்து விரவுங்கா ணம்மானை
மெள்ளமெள்ள வந்து விரவுமே யாமாயி
னுள்ளவத னாற்கெடுதி யுண்டோதா னம்மானை
* யுண்டுச்சி யேறிமலை யுருண்டவன்போ லம்மானை. (8)

¶ பொன்றிடுவாழ் வானவிந்தப் பூவுலகப் போகமதை
யின்பமென்ற லேநரக மென்றனர்கா ணம்மானை
யின்பமென்ற லேநரக மென்றனரே யாமாயின்
றுன்பமென் று யீதொருக்காற் றோன்றுதோ வம்மானை
தோன்று மருடோன்றிற் றுன்பமென வம்மானை. (9)

உள்ளதுபோ காதுநமக் கில்லதுவா ராதெனவே
வுள்ளபடி தானறியி லொடுங்குமன மம்மானை
யுள்ளபடி தானறியி லொடுங்குமன மாமாயி
னெல்லினள வேனுநம்மா வில்லையோ வம்மானை
ஈசனரு ளல்லான்மற் றில்லைகா ணம்மானை. (10)

† அந்தகாரந் தன்னை யகற்றியது சூரியன்போற்
பந்தமதை நீக்குவது பரமனரு ளம்மானை
பந்தமதை நீக்குவது பரமனரு ளாமாயின்
அந்த வருளறியு மறிவுண்டோ வம்மானை
‡ யறிவறி யாமைதனை யகற்றி லுண்டா மம்மானை. (11)

---

* உச்சி மலையேறி யுருண்டவன்போல் கெடுதியுண்டு என மாற்றுக.
¶ பொன்றிடு—அழிந்திடு. † அந்தகாரம்—இருட்டு. ‡ அறிவுஅறியாமை
—நினைப்பு மறப்பு.

கள்ளக் காணுதி ● கவிபோற் குதித்தெழுந்து
பள்ளமதிற் றள்ளும் படுபாவி யம்மானை
பள்ளமதிற் றள்ளும் படுபாவி யாமாயி
னுள்ளபடி தாணொடுக்கு முபாயமுண்டோ வம்மானை
வுதித்தயிடந் தான்பார்க்கி லொடுங்குங்கா ணம்மானை. (12)

உதித்தயிடம் பார்க்கி லுதிப்பொடுங்குந் தானுள்ளே
பதைப்பெழுந்து சற்றே பரவிடுங்கா ணம்மானை
பதைப்பெழுந்து சற்றே பரவிடுமே யாமாயின்
பதைப்பொருக் காலும் பதுங்காதோ வம்மானை
பதுங்குங்காண் பார்த்ததையே பார்த்திருக்கி லம்மானை (13)

ஐம்புலனின் றன்வழியா யங்குமிங்கு மாய்மனது
பம்பரம்போற் சுற்றிப் படருங்கா ணம்மானை
பம்பரம்போற் சுற்றிப் படருமே யாமாயின்
செம்மை பெறவடக்குந் திரமுண்டோ வம்மானை
திரந்தான் சுதாகாசஞ் சேர்ந்துவிடி னம்மானை. (14)

○ மூலவங்கி * மாருதியான் மூட்டி யெழுப்பி $ மதிப்
பாலை யிறக்கியுண்ணப் பசியொழியு மம்மானை
பாலை யிறக்கியுண்ணப் பசியொழியு மாமாயின்
கோல வுயிர்வளரக் கூடுமோ வம்மானை
கூடுமிடை யாதமிர்தங் கொள்ளிற்கா ணம்மானை (15)

தனித்த யிடத்திருந்து சாதனைகள் செய்நிடினும்
நினைப்பு மறப்புவந்து நேருங்கா ணம்மானை
நினைப்பு மறப்புவந்து நேருமே யாமாயின்
¶ சனிக்கா திருக்கவொரு தந்த்ரமுண்டோ வம்மானை
தாரசினுனி போலிருக்கிற் சாராதா மம்மானை (16)

பழக்கமா வாசனையாற் பதைத்துப் பதைத்துமனம்
வழக்கம்போற் சென்று மருவுங்கா ணம்மானை
வழக்கம்போற் சென்று மருவுமே யாமாயின்
‡ களக்கமற விட்டிடற்குக் கருந்துளவோ வம்மானை
கருத்துளச தாநிட்டை கார்த்திருக்கி லம்மானை. (17)

● கவி—குரங்கு. ○ மூலஅங்கி—மூலாக்கினி. * மாருதி—பிராணவாயு
$ மதிப்பால்—சந்திரமண்டலத்தில் ஊறும் அமிர்தம். ¶ சனிக்காது—தோன்றாது. ‡ களங்கம் அற—குற்றம்நீங்க.

குரங்கதோர் கொப்பிருந்தோர் கொப்பதனிற் றாவுவபோற்
பரந்துபோ தம்விடயம் பற்றுங்கா ணம்மானை
பரந்துபோ தம்விடயம் பற்றுமே யாமாயின்
† கரந்திடவு பாயமொரு கருத்திலையோ வம்மானை
கண்வெளியிற் கலந்ததுபோற் கலக்கிலுள வம்மானை. (18)

உன்னும லோராம லுள்ளொளியை யுற்றுற்றுப்
பன்னும லுள்ளபடி பார்த்திருப்பா யம்மானை
பன்னும லுள்ளபடி பார்த்திருப்போ மாமாயின்
என்னையுந்தான் காணுமே யீதென்ன வம்மானை
யேதுஞ்சொல் லாதுசும்மா விருந்திடுவா யம்மானை. (19)

நானெனுமு னைப்பிலது நாடாநா டிப்பழக்கின்
மோனம்வந்து தான்றாக்கி மூடிவிடு மம்மானை
மோனம்வந்து தான்றாக்கி மூடிவிடு மாமாயின்
போனவர்கண் மீண்டெழுந்தும் போவர்களோ வம்மானை
‡ போதமெழிற் றான்மீண்டும் புறம்பாவா ரம்மானை. (20)

உண்ணுவின் னேர்மேலே வுச்சிதனைப் பார்த்தபடி
யென்னாளு மேபழக்கி லின்பமுள தம்மானை
யென்னாளு மேபழக்கி லின்பமுள தாமாயின்
றன்னாலே வந்தின்பஞ் சாருமதோ வம்மானை
சார்ந்து தனைமூடுந் தன்மயமா மம்மானை (21)

* பூசனிக்கா வேண்டிற் பொறி ○ புலனு மைவரைக்காய்
ஆசையொடோர் † பேச்சுரைக்கா தமர்சும்மா வம்மானை
யாசையொடோர் பேச்சுரைக்கா தமரென்றா யாமாயின்
$ வாசனைக டோன்றி வருகுவதே னம்மானை
வந்தாலுந் தன்படியே மாய்ந்துவிடு மம்மானை (22)

● பாமணக்கு மாகமங்கள் பார்த்துத் தெளிந்திடினுங்
காம மயக்கம்வந்து கருத்தழிக்கு மம்மானை
காம மயக்கம்வந்து கருத்தழிக்கு மாமாயின்
¶ றூமனதா னீக்கிடற்குத் தொழிலுண்டோ வம்மானை
சுழிக்கண் டிறந்தாற் றொடர்ந்திடா தம்மானை (23)

---

† கரந்து—ஒழிந்து ‡ போதம்—தற்போதம் * பூசனிக்காது—பூமியில்பிறக்காது. ○ புலனும் ஐவரைக்காய்—புலனாகியஐந்தையும்கோபித்துத்தள்ளிவிடு † பேச்சுஉரைக்காது சும்மா அமர்என்று மாற்றுக. $ வாசனை—பழக்கத்தாலேறியநினைப்புகள். ● பா—பாடல். ¶ தூமனது—பரிசுத்தமனது.

ஆமைபோ லைந்தடக்கி யம்பலத்தை நாடியேயன்
பூமலரா லர்ச்சிக்கிற் $போதமீய்வ னம்மானை
பூமலரா லர்ச்சிக்கிற் போதமீய்வ ளுமாயின்
காமனைக்கண் ணீற்றுங் காரணமே னம்மானை
காட்டினனுஞ் சுழிக்கண்ணுற் காமம்வெல்ல வம்மானை (24)

காலமது வீணாகக் கழித்துவிட்டா லுன்னுயிரைக்
காலன் கொடுபோவான் கைப்பிடித்தே வம்மானை
காலன் கொடுபோவான் கைப்பிடித்தே யாமாயின்
காலன் விலகிடற்குக் கருத்துளவோ வம்மானை
† காலைமே லேற்றினக்காற் காலனில்லை யம்மானை (25)

பாலன்மார்க் கண்டருக்காய்ப் பரமசிவன் றானிடது
காலா லுதைத்தனன்காண் காலன்விழ வம்மானை
காலா லுதைத்தனன்காண் காலன்விழ வாமாயின்
காலே துடலில்லாக் காரணற்கு வம்மானை
காவிடது நற்கலைபிங் கலையிரண்டா மம்மானை (26)

சிதம்பரத்தி லேயன்பர் தெரிசிக்க வேயிடது
பதந்தூக்கி யாடுகிறான் பரமன்கா ணம்மானை
பதந்தூக்கி யாடுகிறான் பரமனே யாமாயின்
கதிப்பாகத் ¶ தென்னோக்குங் காரணமே னம்மானை
காலனையு தைப்பேனெனக் காட்டுகிறா னம்மானை. (27)

‡ கனகவம்ப லந்தனிலே கான்மாறி யாடினதாற்
கனவீர கண்டாமணி காணுமொலி யம்மானை
கனவீர கண்டாமணி காணுமொலி யாமாயின்
அனைவோருங் கண்டதுண்டோ வவ்வோசை யம்மானை
அறிவார்கள் யோகிகண்மற் றாறிவா ரம்மானை. (28)

அழியாம லென்றுமுள வையன் சபாபதியா
ரொளியாகப் பிரகாச முற்றனர்கா ணம்மானை
வொளியாகப் பிரகாச முற்றனரே யாமாயின்
றெளிவாக வெல்லோர்க்குந் தெரியுமோ வம்மானை
தெரியுங்காண் *சிற்சபையைத் தெரிசித்தோர்க் கம்மானை.()

$ போதம்—அறிவு (ஞானம்). †கால்—பிராணவாயு. ¶தென்னோக்கும்—தென் திசையைநோக்கும். ‡ கனகம்—பொன். * சிற்சபை—ஞானசபை.

தேனாறு பாயுஞ் சிதம்பரத்தை யண்டினற்கு
ஞானாமிர் தங்கொடுக்கும் நல்லவர்கா ணம்மானை
ஞானாமிர் தங்கொடுக்கும் நல்லவரே யாமாயின்
நானென்ற வற்கமிர்தம் ‡ நல்குவரோ வம்மானை
நானென்ற தைக்கெடுத்து னல்குவர்தா மம்மானை. (30)

வெட்ட வெளிதன்னின் மேவும் பராபரனை
ரொட்டாம லொட்டி யுருக்கலந்தா ரம்மானை
யொட்டாம லொட்டி யுருக்கலந்தா ராமாயின்
கிட்டினவற் † கொன்றக் கிடைக்குமோ வம்மானை
கிடையாதோ சும்மாவே கிட்டினர்கட் கம்மானை. (31)

பாராதி யெல்லாம் படைத்தவொரு வான்பொருளை
யாராலுங் காண வரிதரிதே யம்மானை
யாராலுங் காண வரிதரிதே யாமாயின்
றாராதி தூரமதோ சொல்லிடுவா யம்மானை
தூரமில்லை சும்மா சுகித்திருந்தா லம்மானை. (32)

ஊனிறைந்த ¶ காய முயிரிழந்து போகுமுன்னம்
* நானிறந்து போவதெந்த நாளென்று னம்மானை
நானிறந்து போவதெந்த நாளென்று னாமாயின்
நானிறந்த பேர்களேமெஞ் ஞானியோர் வம்மானை
ஞானியென்றே நான்மறையும் ○ நவின்றனகா ணம்மானை

வித்தார முங்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரியென்று னம்மானை
செத்தாரைப் போலே திரியென்று னாமாயின்
அத்தகைய தென்றயநா னடைவேனோ வம்மானை
யடையலாந் தன்முனைப்பு அடங்கிவிடி னம்மானை. (34

எத்தனையோ கற்றாலு மேதுசித்தி பெற்றாலுஞ்
செத்தாரைப் போற்றிரியுந் திரமரிதே வம்மானை
செத்தாரைப் போற்றிரியுந் திரமரிதே யாமாயி
● னத்தாங் கனுபவத்தி லார்கொண்டா ரம்மானை
யருளான்முன் னாலடைந்தா ரளவில்லை யம்மானை. (35)

ஞானவம்மானை முற்றிற்று.

---

‡ நல்குதல்—கொடுத்தல். † ஒன்ற—சேர. ¶ காயம்—உடல். * நான் இறந்து—நான் என்ற முனைப்பு இறந்து. ○ நவின்றல்—சொல்லல். ● அது ஆங்கு என்பது, அத்தாங்கு என்று, ஒலித்தல் விகாரமாயிற்று.

இறைவன்றிருவருளைச், சிலேடையாகத் துதித்தல்.

† சிற்ககன வீதிதனிற் செஞ்சிலம்ப தோசையிடக்
குற்றமிலா தாடுகிற ‡ கூத்தாடி யம்மானை
குற்றமிலா தாடுகிற கூத்தாடி யாமாயின்
பொற்காசு வாங்கப் புகுவாரோ வம்மானை
பொன்னம் பலமிருப்பாற் பொன்வாங்கா ரம்மானை. (36)

நினைப்புமறப் பற்று நினைந்த ¶ வறிவையரை
* தனித்த யிடஞ்சேருஞ் சமர்த்தன்கா ணம்மானை
தனித்த யிடஞ்சேருஞ் சமர்த்தனே யாமாயி
னனைத்தவருங் கண்டா ரடியாரோ வம்மானை.
அடியரே கண்டா ரடிபணிவா ரம்மானை. (37)

அடுத்த வரையெல்லா மன்புளன்போற் றூன்வந்து
எடுத்து விழுங்குகின்ற $ வேகன்கா ணம்மானை
யெடுத்து விழுங்குகின்ற வேகனே யாமாயின்
● கடுத்தவனைப் பற்றியொன்றக் கட்டாரோ வம்மானை
கண்டார் விடுவாரோ கட்டுவர்தா மம்மானை. (38)

வெள்ளைப் ○ புனலை விரிசடையிற் றூங்கினவர்
கொள்ளை A மலநீக்குங் B குரவர்கா ணம்மானை
கொள்ளை மலநீக்குங் குரவரே யாமாயின்
கள்ளத் தொழில்செய்யக் கண்டதுண்டோ வம்மானை
கண்டதுண்டுள் ளத்தைக் கவர்தலா லம்மானை. (39)

அசித்தான போகம்விட்டு வகண்டவெளி மேயவந்த
C பசுக்களையெல் லாமுண்ணும் D பரையன்கா ணம்மானை
பசுக்களையெல் லாமுண்ணும் பரையனே யாமாயின்
E இசித்தாரும் போய்த்தொட் டிடுவாரோ வம்மானை
F ஈரமில்லா நெஞ்சத்தா ரேன்றொடுவா ரம்மானை. (40)

---

† சிற்ககனம்—ஞானவாகாயம். ‡ கூத்தாடி—நடனமாடுபவன். * தனித்தயிடம் — கருவிகளோய்ந்தயிடம். ¶ அறிவை, தனித்த, அறையிடம்எனமாற்றுக. $ எகன்— ஒருவன். ● கடுத்து—வலித்து. ○ புனல்—கங்கை. A மலம்—மாயாமலம். B குரவர்—பெரியோர். C பசு—ஆன்மா. D பரைஅன்—பராசத்தி தலைவன். E இசித்து—இச்சித்து. F ஈரம்—அன்பு

என்று மொருபடியே யேறிக் குறையாமல்
நின்றபடி யேநின்ற † நித்தியன்கா ணம்மானை
நின்றபடி யேநின்ற நித்தியனே யாமாயின்
ஒன்றினிலு மூட்டார்ந் திருக்கானோ வம்மானை
வூட்காரு வானுள்ளன் புடையாரு ளம்மானை. (41)

நாட்டிலுள்ள ‡ நற்பசுவை நன்றாக மேய்த் தமுத்திக்
கூட்டி லடைக்குகின்ற $ கோனான்கா ணம்மானை
கூட்டி லடைக்குகின்ற கோனானே யாமாயின்
கேட்டவற்குப் பாலுங் கிடைக்குமோ வம்மானை
கேள்சம்பந் தற்குக் கிடைத்தகதை யம்மானை. (42)

மண்ணீர்விட் டுப்பிசைந்து **மாருதியாற் றீமூட்டி
விண்ணடைத்துத் தான்கடஞ்செய் வேளான்கா ணம்மானை
விண்ணடைத்துத் தான்¶கடஞ்செய் வேளானே யாமாயின்
பண்ணினதிற் குசக்கியம் பணித்தனரோ வம்மானை
பாதம் பணியப் பணித்தனர்கா ணம்மானை: (43)

வள்ளலைப்போற் கேட்டதெலாம் வழக்கிடுவன் முன்முடிவில்
மெள்ளமெள்ள வந்து விழுங்குவன்கா ணம்மானை
மெள்ளமெள்ள வந்து விழுங்குவனே யாமாயி
னெள்ளள வெனுமிறக்க மில்லையோ வம்மானை
* யில்லை யுடலவற்கு யிறக்கமே தம்மானை. (44)

வெள்ளைவிடை யேறும் விமலனு ரண்டினரைக்
● கொள்ளிக்கண்ணாற் பார்த்துட் குடிகெடுப்பா ரம்மானை
கொள்ளிக்கண்ணாற் பார்த்துட் குடிகெடுப்பா ராமாயின்
எள்ளினள வேனுமொன்று மீயாரோ வம்மானை
யீயான் ○ வரவுசெல வில்லதனு லம்மானை. (45)

உலகப் பணிதியெலா முண்டுபண்ணச் சிற்ககனத்
தலமதனிற் காலாட்டுங் A தட்டான்கா ணம்மானை
தலமதனிற் காலாட்டுந் தட்டானே யாமாயின்
பலமுடனே கைக்கூலி பற்றினரோ வம்மானை
பற்றறப் பற்றினரைப் பற்றினர்தா மம்மானை. (46)

† நித்தியன்—அழிவில்லாதவன். ‡ நற்பசு—நல்லஆன்மாக்கள். $ கோனன்—தலைவன். ** மாருதி—காற்று. ¶ கடம்—உடல்.(குடம்) * உடலில்லாததால் எறிக்குறையாது என்றறிக. ● கொள்ளிக்கண்—அக்கினிக்கண். ○ வரவு செலவு—பிறப்பு இறப்பு. A தட்டான்—ஒன்றிலும்ஒட்டாதவன்.

17648
600 008.

வீசிக் கிருகிறென † மெய்யான பம்பரத்தைப்
பாசக் கயிற்ருட்டும் பையன்கா ணம்மானை
பாசக் கயிற்ருட்டும் பையனே யாமாயின்
‡ ஆசித் தொருவர்சொலுக் கடங்கானே வம்மானை
யடங்கா னடியாற்குள் ளடங்குவன்ரு னம்மானை (47)

ஒருவித்திட் டே $நாத்து வொன்பதுபத் தாருக்கித்
தருணம்போற் பக்குவஞ்செய் சமுசாரி யம்மானை
தருணம்போற் பக்குவஞ்செய் சமுசாரி யாமாயின்
பெருஞ்செல்வம் வைத்துப் பிழைத்தவரோ வம்மானை
பிழைத்தா ரவரையண்டிப் பேறனேக ரம்மானை (48)

ஞானகா யந்தனிலே நடனமிடு நற்பதத்தார்
சேனு பதிபோன்ற திடவீர ரம்மானை
சேனு பதிபோன்ற திடவீர ராமாயின்
போனுரோ வெற்றிகொள்ளப் போர்க்களத்தே யம்மானை
போயடைந்தா ராணுவத்தைப் போக்குவர்தா மம்மானை(49)

92:417
N2

ஊட்டி யுறக்கி வுபசரித்துச் சீவர்களை
நாட்டியங்க ளாட்டுவிக்கும் * நட்டுவர்கா ணம்மானை
நாட்டியங்க ளாட்டுவிக்கும் நட்டுவரே யாமாயின்
கூட்டியெவற் கும்பெண்ணைக்கொடுத்ததுண்டோ வம்மானை
கொடுத்தாரே சுந்தரற்குக் குவலயத்தி லம்மானை (50)

சுட்டசுடு காடதனிற் ருெந்தோந்தொந் தோமெனவே
பொட்டலிலா டும்¶வரவு போக்கிலிகா ணம்மானை
பொட்டலிலா டும்வரவு போக்கிலியே யாமாயின்
ருெட்டவர்கண் மூழ்குவரோ சுத்தகங்கை யம்மானை
○ தோய்வர்பே ரின்பவெள்ளந் தொட்டவுட னம்மானை ()

அழுத்தமா யன்புகொண்டோ ரவர்வீட்டுட் சென்றுமன
வழுக்குப் புடவைசுத்த மாக்கும்**வண்ணு னம்மானை
யழுக்குப் புடவைசுத்த மாக்குவண்ணு னுமாயின்
வெழுத்ததிற்குக் கூலிபெறு விடுவானே வம்மானை
● வீதி மறித்திடுவான் விட்டிடா னம்மானை (52)

---

† மெய்–உடல். ‡ ஆசித்து–விரும்பி. $ ஒன்பதுபத்து ஆறுநாத்து–தொண்ணூற்ருறு தத்துவம். * நட்டுவர்–ஆட்டுவிப்பவர். (ஆடுபவர்) ¶ வரவுபோக்குஇலி–வரவுபோக்குஇல்லாதவன். ○ தோய்வர்–மூழ்குவர். ** வண்ஆன்–அழகுடையவன். ● வீதிமறித்தல்–பிராணவாயுவைத்தடுத்தல்.

மருவு † மன்ப ருக்காக மாமதுரைப் பட்டினத்தே
பரிவினோ டோடிவந்த ‡ பரிகாரனம்மானை
பரிவினோ டோடிவந்த பரிகார னமாயின்
சரியாய்த் தலைவழிக்குஞ் சாதியோ வம்மானை
தற்போதத் தைவழிக்குஞ் சாதிதா னம்மானை (53)

உடல்செப் புயிர்பந்தா யோடியா டியொழித்துக்
$ கடைவீதி யாடுகின்ற கழைக்கூத்த னம்மானை
கடைவீதி யாடுகின்ற கழைக்கூத்த னாமாயின்
அடைவாயெல் லோருங்கூத் தறிவாரோ வம்மானை
யறிவா ரறிவார்மற் றோரறியா ரம்மானை (54)

¶ எண்சாண் பனையுச்சி யிருக்கும்பே ரின்பக்கள்
ளுண்பா யென * வறிஞர் கூட்டுவன்கா ணம்மானை
யுண்பா யெனவறிஞர் கூட்டுவனே யாமாயின்
நண்பா யெவற்கூட்ட நாடானோ வம்மானை
நானென்ற வற்கூட்ட நாடான்று னம்மானை. (55)

எண்ணிலாச் சிவரெனும் யானை யதிலேறி
மண்ணி னடத்துகின்ற மாவுத்த னம்மானை
மண்ணி னடத்துகின்ற மாவுத்த னாமாயின்
உண்ண வுணவுதண்ணீ ரூற்றுவனோ வம்மானை
யூற்றச் சடையா னொருக்காலு மம்மானை. (56)

தந்தைதா யில்லாத் தனிச்செருக்க னைகையினாற்
சிந்தையுள வாறதெலாஞ் செய்குவன்கா ணம்மானை
சிந்தையுள வாறதெலாஞ் செய்குவனே யாமாயின்
என்று மொருபடியே யிருப்பானோ வம்மானை
இருந்த படியென்று மிருப்பன்கா ணம்மானை. (57)

A சலியா திருந்துகொண்டு தன்னை யடைந்தோரைப்
புலிபோலே பாய்கின்ற போர்வீர ரம்மானை
புலிபோலே பாய்கின்ற போர்வீர ராமாயின்
வலியவர் B தேவரையும் வளைப்பானோ வம்மானை
C மாசின் மனத்தாரை வளைப்பர்தா மம்மானை. (58)

† அன்பர்—மாணிக்கவாசகர். ‡ பரிகாரன்—குதிரைக்காரன். $ கடைவீதி—முடிவானஇடம். ¶ எண்சாண்பனை—உடல். * அறிஞர்—அறிவுள்ளோர். A சலியாது—அசையாது. B எவரையும்என்பது, எவரையும்என்றுநீட்டல் விகாரமாயிற்று. C மாசுஇல்— குற்றமில்லாத.

காரமுள்ள †காயத்தைக் கடுஞ்சுக்க தாக்கி ‡ வெளிச்
சிரகத்தை யேகொடுக்குஞ் செட்டியா ரம்மானை
சிரகத்தை யேகொடுக்குஞ் செட்டியா ராமாயின்
ஆரிடத்தும் லாப மடைவானோ வம்மானை
அச்சரக்கை வாங்கி னடைவான்று னம்மானை (59)

எல்லா வுயிர்களிடத் திருந்தபடி யேயிருந்து
பல்லோர் கணக்குமொத்துப் பார்ப்பான்கா ணம்மானை
பல்லோர் கணக்குமொத்துப் பார்ப்பானே யாமாயின்
சொல்லார்வே தப்பொருளைச் சொன்னதுண்டோ வம்மானை
சொல்லாமற் சொன்னதுண்டு தொண்டருக்கே யம்மானை.()

$ நூலையொன்று கப்பிணைத்து நட்பவச்சுக் குட்செலுத்திச்
சாலப் புடவைநெய்யுஞ் ¶ சாலியன்கா ணம்மானை
சாலப் புடவைநெய்யுஞ் சாலியனே யாமாயின்
கோலமுடன் கண்டதுண்டோ குவலயத்தே வம்மானை
● ஆலடியிற் கண்டார்க ளன் ○ னால்வ ரம்மானை. (61)

ஆதியிலி யந்தமிலி யதுவிதுவ மென்பதிலி
சாதிவரை யேதுமில்லாச் சாதிகெட்டா னம்மானை
சாதிவரை யேதுமில்லாச் சாதிகெட்டா னாமாயின்
ஓதியுணர் சங்கத்தாற் கொப்புமதோ வம்மானை
ஒப்பாம A னீர்குளித்த துலகறியு மம்மானை (62)

படைத்தபற் சீவரயில் பக்கஞ்செல் லாதுவினைத்
தடத்துவழி யோட்டுகிற B ட்ரைவர்கா ணம்மானை
தடத்துவழி யோட்டுகிற ட்ரைவரே யாமாயின்
எடுத்தெவருஞ் சம்பளங்க ளீய்வர்களோ வம்மானை
எல்லா மவனுடைமை யெவரீய்வா ரம்மானை. (63)

எல்லா வுலகனைத்து மேகசக்கி ராதிபனைச்
சொல்லின் படிநடத்துஞ் சுதந்தரத்தா னம்மானை
சொல்லின் படிநடத்துஞ் சுதந்தரத்தா னாமாயின்
எல்லார்க்குஞ் செய்வா C னிதமோதா னம்மானை
இதமல்லா D வின்னா விடர்செய்யா னம்மானை. (64)

---

† காயம்—உடல். ‡ சீர், வெளி, அகம்—சீர்மை பொருந்திய ஞானகாய வீடு. $ நூல்—சாஸ்திரம். ¶ சாலி அன்—மாயாசாலியின் றலைவன். ● ஆல்-கல்லாலமரம். ○ நால்வர்—சனகர், சனக்குமாரர், சனந்தனர், சனற்த்தனர். A நீர் குளித்தது—நற்கீரதேவர், மடுவில் வீழ்ந்தது. B ட்ரைவர்—ரயில் ஓட்டுபவன். C இதம்—நன்மை. D இன்னா—தீமை.

ஒன்றினிலு மொட்டா ஞெருபேச்சுக் குள்ளாகான்
தன்மனம்போற் செய்திடுவான் † றப்பிலிகா ணம்மானை
தன்மனம்போற் செய்திடுவான் றப்பிலியே யாமாயின்
அன்னவனுக் கோர்வீ டமைந்த துண்டோ வம்மானை
யவன்வீடு வெட்டவெளி யாச்சுதுகா ணம்மானை. (65)

வீடொன்று மில்லாதான் வெட்டவெளி தன்னினின்று
ஆடுவான் நாணமில்லா தம்பலத்தே வம்மானை
யாடுவான் நாணமில்லா தம்பலத்தே யாமாயின்
நாடினவர் கட்கென்ன லாபமுண்டா மம்மானை
லாபமென்ன ‡ தன்னைப்போ லாக்குவன்கா ணம்மானை. (66)

களக்கமனம் விட்டுக் கருதி யடைந்தவற்கு
¶ விளக்குமா றேகாட்டும் $ விகடன்கா ணம்மானை
விளக்குமா றேகாட்டும் விகடனே யாமாயின்
* அழூதபிள்ளை தன்னை யணைப்பானோ வம்மானை
அணைத்தளவி லானந்தத் தழுத்துவன்கா ணம்மானை. (67)

அன்பரையாட் கொள்ளவென வன்புடனே யோருருவா
யன்னைதந்தை யேதுமிலா A தவதரித்தா ரம்மானை
அன்னைதந்தை யேதுமிலா தவதரித்தா ராமாயின்
என்னவென்றி லக்கணங்க ளிசைத்தனர்கா ணம்மானை
இசைத்தனர்காண் வெட்டவெளி யேவீடென்றம்மானை (68)

B அக்கருகு கொன்றைதும்பை யணிந்தாடு மம்பலர் Cமே
சக்கிலிய னென்றுமறை சாற்றியகா ணம்மானை
சக்கிலிய னென்று D மறை சாற்றியதே யாமாயின்
றக்கபிணஞ் சுட்டெரிக்குஞ் சாதியனோ வம்மானை
தத்துவத்தைச் சுட்டெரிக்குஞ் சாதியன்கா ணம்மானை. (69)

பழமையோ னுயிருந்தும் பற்பலதை யுண்டுபண்ணி
விளையாட்டுப் பார்க்குகின்ற விருத்தன்கா ணம்மானை
விளையாட்டுப் பார்க்குகின்ற விருத்தனே யாமாயின்
இளைஞோர்கள் கண்டவுட னேசாரோ வம்மானை
யேசினதுண் E டாரூரனெத்தனையோ வம்மானை. (70)

† தப்புஇலி—குற்றமில்லாதவன். ‡ தன்னைப்போலாக்குவதே இறைவன் இயற்கையாம். ¶ விளக்கும் ஆறு—விளக்கும்வழி. $வி,கட,அன்–உடல்இல்லாதவன். * அழுதபிள்ளை—அன்புடைய அடியவர்கள். A அவதரித்தார்—தோன்றினார். B அக்கு—உருத்திராக்ஷம். C மசக்குஇலியன்—மயக்கமில்லாதவன். D மறை—வேதம். E ஆரூரன்—சுந்தரமூர்த்தி நாயனார்.

நேயமா யண்டமெலாம் நிமிஷம் படைத்தழித்துப்
பேயோடே யாடும் பெரும்பித்த னம்மானை
பேயோடே யாடும் பெரும்பித்த னுமாயின்
தாயாதி யாரேனுந் தடுக்காரோ வம்மானை
தாய்தந்தை யில்லாரைத் தடுப்பாரா ரம்மானை (71)

வேலையொன் றுமில்லாதான் விரும்பியடைந் தோர்தலையிற்
காலான் மிதிக்குங் $கடையன்கா ணம்மானை
¶ காலான் மிதிக்குங் கடையனே யாமாயின்
சாலவே தான்மிதிக்குந் தன்மையென்ன வம்மானை
தன்னைப்போ லாக்கவெனத் தான்மிதித்தா னம்மானை.(72)

பித்த னிறைபவன்றன் பெண்ணோ வெனைப்பார்த்துச்
செத்துப்போ வென்றுசொன்ன † தேவடியா ளம்மானை
செத்துப்போ வென்றுசொன்ன தேவடியா ளாமாயின்
அத்தகைய வார்த்தைசொல்வ தழகோதா னம்மானை
யழகென்றே வெட்கமில்லா தாடினர்கா ணம்மானை. (73)

அட்டதிக்கெ லாமொன்று யாசியற்ற மாமதுரைப்
பட்டினத்தி லேவந்த * பழிக்கஞ்ச னம்மானை.
பட்டினத்தி லேவந்த பழிக்கஞ்ச னுமாயின்
இட்டமுட னேர்செலவு மியற்றானோ வம்மானை
யியற்றான் A வரவுசெல வில்லான்கா ணம்மானை. (74)

சந்தகம டைந்தோர்க்குத் தான்பிரகா சிக்கவெனப்
B பந்தம் பிடித்தெரிக்கும் பையன்கா ணம்மானை
பந்தம் பிடித்தெரிக்கும் பையனே யாமாயின்
பந்தம்பிடித் தக்கூலி பற்றுவனோ வம்மானை.
பற்றுவனுள் ளத்தையெல்லாம் C பவநாச னம்மானை. (75)

ஞானவம்மானை சிலேடை முற்றிற்று.

$ கடையன்—முடிவானவன். ¶ காலால் மிதித்தல்—திருவடித்தீக்ஷை.
† தே. அடியாள்—தெய்வத்திற்கு அடியவள் ஈஸ்வரி. * பழிக்குஅஞ்சன்—பழிக்குப்பதரியவன்; திருவிளையாடற் புராணத்தில் பழியஞ்சியபடலத்தில் காண்க. A வரவு செலவு—பிறப்பு இறப்பு. B பந்தம்—உலகபாசமாகியகட்டு.
C பவநாசன்—பிறப்புஇல்லாதவன்.

சிவமயம்

ஓம் பரம சற்குருவே துணை.

ஞானச்சேவல் கூவுதல்.

பாட்டு.

சேவற்கூவுதே காலை சேவற்கூவுதே—சுத்த
சிதாகாசஞ் சேருமெனச் சேவற் கூவுதே.

இருட்டி லுறங்குவோரே சேவற்கூவுதே—பந்த
விருள்விடியப் பாருமெனச் சேவற்கூவுதே
அருட்*கதிரைப் பாரெனவே சேவற்கூவுதே—பர
மானந்தமே சேருமெனச் சேவற்கூவுதே. (1)

† மூலையி லுறங்குவோரே சேவற்கூவுதே—வீதி
‡ முச்சந்தி வாருமெனச் சேவற்கூவுதே
¶ மேலத்தெரு வீதிவழி சேவற்கூவுதே—வெட்ட
வெளிக்குநாம் போவோமெனச் சேவற்கூவுதே. (2)

*$ மலத்தைக் கழித்திடெனச் சேவற்கூவுதே—$ சுத்த
வாசனை யணியுமெனச் சேவற்கூவுதே
A கலசத் தமிர்தமுண்ணச் சேவற்கூவுதே—மூல
காரணனைப் போற்றுமெனச் சேவற்கூவுதே. (3)

சுத்தகங்கை மூழ்குமெனச் சேவற்கூவுதே—சுயஞ்
சோதிநீ றணியுமெனச் சேவற்கூவுதே
B சிற்ககன வீதிவரச் சேவற்கூவுதே—சக
சிவபர வைக்யமெனச் சேவற்கூவுதே. (4)

வெளியிலே வாருமெனச் சேவற்கூவுதே—Cகடு
வெளிக்குள் வெளிபாரெனச் சேவற்கூவுதே
ஒளியேகம் பாருமெனச் சேவற்கூவுதே—வினை
யொளிக்குளொழித்திடெனச் சேவற்கூவுதே. (5)

---

*கதிர்—சூரியன். † மூலை—அடிமூலம். ‡ முச்சந்தி—சுழிமுனை. ¶மேல த்தெரு—அண்ணாவின்மேல்உள்ள துவாரம். *$மலம்—ஆணவம், காமியம், மாயை. $சுத்தவாசனை—நல்லோர்சேர்க்கை. A கலசத்து அமிர்தம்—சந்திர கலசஅமிர்தம். B சிற்ககனம்—ஞானவாகாயம். C கடுவெளி—வெறுவெளி.

காலன் வருவானெனச் சேவற்கூவுதே—வீணுய்க்
காலங்கழி யாதேயெனச் சேவற்கூவுதே
பாலநெருப் பாறுதாண்டிச் சேவற்கூவுதே—சுத்த
பதியறிந்து வாழுமெனச் சேவற்கூவுதே. (6)

‡ கண்விழித்துப் பாருமெனச் சேவற்கூவுதே— †காலைக்
கண்டுபிழை யென்றுசொல்லிச் சேவற்கூவுதே
விண்வெளியில் வாருமெனச் சேவற்கூவுதே—வாரா
விட்டால்வீண னென்றுசொல்லிச் சேவற்கூவுதே. (7)

கண்மறந் துறங்குவதென் சேவற்கூவுதே—ஞானக்
கண்ணறிந்து தூங்குமெனச் சேவற்கூவுதே
உண்ணினைந் துணைப்பாரெனச் சேவற்கூவுதே—வுனக்
குற்றதுணை தேவனெனச் சேவற்கூவுதே (8)

சொற்பனத்தி லிருப்போரே சேவற்கூவுதே—பந்தச்
சொற்பனம்விட் டெழுமென்னச் சேவற்கூவுதே
தற்பாத்தை நாடுமெனச் சேவற்கூவுதே—நாடிற்
றன்மயம் தாக்குமென்ச் சேவற்கூவுதே (9)

உண்டுண் டுறங்குவோரே சேவற்கூவுதே—பா
¶ மொன்றிநின் றுறங்குமெனச் சேவற்கூவுதே
எண்டிசையும் பாரெனவே சேவற்கூவுதே—பா
மில்லதுவே றில்லையெனச் சேவற்கூவுதே (10)

காம மயக்கங்கொண்டோய் சேவற்கூவுதே—சுழிக்
கண்விழித்துப் பாருமென்ச் சேவற்கூவுதே
தாமதரா சதங்கொண்டோய் சேவற்கூவுதே—நாளுஞ்
சாத்வீகம்பொ ருந்திடெனச் சேவற்கூவுதே. (11)

நானெனம யங்குவோரே சேவற்கூவுதே—சும்மா
நானற் றிருப்பாயெனச் சேவற்கூவுதே
தானேதனி யாமெனவே சேவற்கூவுதே—சும்மா
தனித்திருந்து பாரெனவே சேவற்கூவுதே. (12)

ஞானச்சுடர் வீசுதெனச் சேவற்கூவுதே—வதை
நாடாநாடிப் பாருமெனச் சேவற்கூவுதே

‡ கண்—நெற்றிக்கண். † கால்—பிராணவாயு. ¶ ஒன்றி—சேர்ந்து.

‡ வானமதைப் பாருமெனச் சேவற்கூவுதே—மௌன
மலரணையுட் காருமெனச் சேவற்கூவுதே. (13)

உறங்கா துறங்குமெனச் சேவற்கூவுதே—யென்று
முள்ள திலொன் றுயோவெனச் சேவற்கூவுதே
சிரங்கா ணெழுந்திருந்து சேவற்கூவுதே—மதித்
தேனமிர் தருந்தும்மனச் சேவற்கூவுதே. (14)

இராப்பகலில் லாவிடத்தே சேவற்கூவுதே—நாளு
மின்பமொடு தூங்குமெனச் சேவற்கூவுதே
†பராக்கிலா திருப்பாயெனச் சேவற்கூவுதே—வுண்மை
பதிந்திருந்து பாருமெனச் சேவற்கூவுதே. (15)

பாராமற் பாருமெனச் சேவற்கூவுதே—நாளும்
பார்த்ததையே பாருமெனச் சேவற்கூவுதே
சிரா $யுன்னைப் பாரெனவே சேவற்கூவுதே—தனிச்
சிற்சபையுட் சேருமெனச் சேவற்கூவுதே. (16)

நினையாது நினையெனச் சேவற்கூவுதே—யென்றும்
நின்றபடி நில்லுமெனச் சேவற்கூவுதே
மனவெளி பரவெளியிற் சேவற்கூவுதே—யென்றாய்
மருவி யிருப் பரயெனச் சேவற்கூவுதே. (17)

பதைப்பை யறுப்பாயெனச் சேவற்கூவுதே—நாளும்
பற்றற்றதைப் பற்றுமெனச் சேவற்கூவுதே
¶ மதப்பே யொழிப்பாயெனச் சேவற்கூவுதே—வுள்ளே
மறப்புநினைப் பறுவெனச் சேவற்கூவுதே. (18)

என்றுமுள்ள தாயிருக்கச் சேவற்கூவுதே—அறி
வேபொருள தாமெனவே சேவற்கூவுதே
அன்றின்றென்று முள்ளதெனச் சேவற்கூவுதே—பர
மானந்தமா னந்தமெனச் சேவற்கூவுதே. (19)

உதித்தழியா வின்பமெனச் சேவற்கூவுதே—வுணை
யுண்டிலங்குஞ் சோதியெனச் சேவற்கூவுதே
பதித்திரு தலையெடாதே சேவற்கூவுதே—பார்க்கப்
பார்க்கச்சுக மென்றுசொல்லிச் சேவற்கூவுதே. (20)

ஞானச்சேவல் கூவுதல் முற்றிற்று.

‡ வானமென்றது, ஞானாகாயமென்றறிக. † பராக்கு—பராமுகம். $ உன்னை பார்—நானென்றுஉன்னுதுபார். ¶ மதப்பேய்—சமயவாதப்பேய்.

சிவமயம்

குமர குருபரன்றுணை.

பரிபூரணானந்த ஞானம்.16.

அகரமொடு வுகாரமகா ரங்களாகி
அமைந்திருந்த வோங்காரப் பொருளுமாகிச்
சிகரமதி லொளியாகி நாதமாகிச்
சிறந்திருந்த வாகாய வட்டமாகிப்
பகரயிட மில்லாத வஸ்துவாகிப்
பண்பாக வெளியுள்விளை யமிர்தமாகித்
தகமைபெற விளங்குகுரு மூர்த்தியாகுந்
தந்திமுகன் பதம்போற்றிச் சாற்றுவோமே. (1)

சாற்றுகிற தேதென்று வுலகின்மீதிற்
சாருகின்ற மனந்தன்னை லயமாய்க்கொண்டு
சேர்த்துவிடு புருவநடு வுண்ணாக்காகச்
செலுத்தியே மனமசையா திருத்திக்கொண்டு
சீற்றமொடு வரும்வாசி தன்னைமேலே
செலுத்தப்பா சிறுவாசல் வழியதாகக்
காற்றுள்ளே சென்றுசெயும் மார்க்கந்தன்னைக்
கருத்துடனே சொல்லுகிறேன் கருவாய்க்கேளே. (2)

கேளப்பா புருவநடு விம்மலாகுங்
கிறுகிறென்றே பம்பரம்போற் சுற்றியாடும்
வாளப்பா மூலத்தி லிருந்துவாசி
வளமாக மேனோக்கும் போதிற்றானே
ஆளப்பா வபானமெனும் வாசலோடு
ஆண்குறியும் பீசமதை மேலேநோக்கி
வேளப்பா விசைகொண்டு யிழுத்தாற்போலே
விறைந்தெழுக்கும் வன்னியின்றன் வேகந்தானே. (3)

தானென்ற பிடரிவழி நரம்பினூடே
தப்பாது குபீரென்று யேறும்பாரு
கோனென்ற சிறுவாச லூடேசென்று
கூறுகிறே னறுகோண வீதிதன்னிற்
கானென்ற காற்றூடி போலேசுற்றும்
காதுகளில் நாதவொலி திடமாய்க்கேட்கும்
வானென்ற வுச்சிநடு வாசிசெல்லும்
வளமாக மதியமிர்தந் துளிக்கும்பாரே. (4)

பாரையா வவ்வமிர்த முண்டுபாரு
    பாலமிர்தம் போல்ருசியா யிருக்குமையா
ஆரையா சுடர்கதிரும் மதியைப் போலே
    அதியங்காண் சுடர்வீசு மறிந்துபாரு
சீரையா பஞ்சவர்ன மாகத்தோன்றும்
    சிவசிவா யென்சொல்வேன் றெழிந்துபாரு
காரையா ககனவெளி போலே தோன்றுங்
    கண்களுக்கே வடங்காத காக்ஷியாமே. (5)

காக்ஷியடா காக்ஷிமிகக் கண்ணிற் காணுங்
    * கடத்திலுள நரம்பதுதான் படபடென்றே
தாக்ஷியிலாத் துடிப்புடனே காணலாகுந்
    தமர்வாச லூடுசென்று வெளியிற்சேர்ந்த
மாக்ஷியடா மதுவுண்டாற் போலேபோதை
    வருகுமடா லாகிரியின் மகிமைமிக்கச்
சூக்ஷியடா மென்மேலும் வந்துதாக்கிச்
    சொக்குமடா யிவ்வுண்மை தொடர்ந்துகாணே. (6)

காணவே புலனிச்சை யற்றுப்போகுங்
    கான்முதலா யுடம்பெல்லாஞ் சோர்ந்துகாணும்
ஊணவே வுணவாதி வெறுப்பாய்த் தோன்றும்
    ‡ உன்மத்தங் கொண்டவன்போ லிருக்கலாகும்
நாணமா திகளெல்லா மற்றுப்போகும்
    நானென்ற வாணவமு மிறந்துபோகும்
பேணவே யாசையெலா மொழிந்துபோகும்
    பெருமையொடு பேச்சுமிறந் திருக்கலாச்சே. (7)

ஆச்சப்பா வாசியது கடுத்தோடாது
    அமைதியா யோடுமிதை யறிந்துபாரு
ஓச்சப்பா குமுரல்போ லுள்ளேகேட்கும்
    உடம்பெல்லாம் நடுக்கமது போலேகாணும்
காச்சப்பா காதுகண்க ளுசிமத்தி
    கண்டமுச்சி மத்திதன்னிற் காக்ஷிமிக்க
வாச்சப்பா யோகமென்ற மார்க்கந்தன்னை
    வழிதுறையா யறிந்துகொண்டு வருந்திச்செய்யே. (8)

* கடம்—உடல். ‡ உன்மத்தம்—பித்தம்.

வருந்துவா ரிரேசகபூ ரசமுங்கும்ப
மார்க்கமென மூச்சடக்கி மெலிந்துபோவார்
அறிந்துபா ரிதுவெல்லாம் வருத்தமப்பா
ஆகாய மென்றவுச்சி வட்டந்தன்னில்
இருந்துபார் மனதினுடு வாசியேற்றி
யேகமய மாகப்ர காசங்காணுஞ்
செரிந்துபா ரானந்தம் மிகவேதோன்றுஞ்
சினந்துபா ராச்சும்மா யிருந்துபாரே. (9)

சும்மாநீ யிருக்கவென்றால் வகையைக்கேளு
சுத்தசிதா காசமதி னூட்டம்வைத்து
வம்பாகக் குதித்தெழுந்த மனத்தைத்தானும்
மாசில்லா வறிவென்னும் வாளால்வீசி
நம்பாநீ பதைத்தெழுந்தி டாதவண்ணம்
நாட்டமொடு மதுவுண்ட வண்டைப்போலே
சும்மாநீ யிருந்தபடி யிருந்துவாழ்வாய்
சொல்லுதற்கு மடங்காத சுகமாங்காணே. (10)

சுகமென்றே வுதித்திடினீ வேறாய்நிற்குஞ்
சுகமென்ற வெண்ணமுதிக் காதவண்ணம்
அகமுள்ளே பார்த்ததையே பார்த்திருந்தா
லப்பவல்லோ வருள்கிட்டு மதீதமாவாய்
இகலோக பரலோக விச்சையில்லா
தெப்போது முள்ளபடி யிருந்துவாழ்வாய்
பகலேபோல் வெட்டவெளி தன்னைக்காண்பாய்
பதிந்திருந்து பார்த்தாலே பரமாம்நாடே, (11)

நாடென்று னாடாது னாடவேண்டும்
நானென்ற முனைப்பில்லா திருக்கவேண்டுந்
தேடென்றுற் றேடாமற் றேடவேண்டும்
சினந்துபா ராமலுட் பார்க்கவேண்டும்
கூடென்றுற் கூடாமற் கூடவேண்டும்
கூடினே னென்றநினைப் பறுக்கவேண்டும்
வீடென்றே கிட்டுவதா யெண்ணுமெண்ணம்
விட்டகன்று பரம்பொருளின் மேவுவாயே. (12)

மேவுவா யுள்ளபடி மேவிப்பாரு
விரும்பியே வுன்னையற விழுங்குமப்போ
சீவனுடன் சிவன்வேறென் றெண்ணமுண்டேற்
சீவேச வைக்யமது கூடாதப்பா
டாவுவா யுள்ளபடி யதுவதாகப்
பதித்திடுவா யென்றுமொரு படித்தாய்நிற்பாய்த்
தாவும்பார் புலிபேலே வுன்னையுண்டு
தானாக விளங்குசர்வ சாக்ஷிதானே. (13)

சாக்ஷியடா வுன்னையற வுண்டுகொண்டு
தன்மயமாய் விளங்குமடா தனித்துப்பாரு
சூக்ஷியடா மிகுசூக்ஷி ஞானமாகும்
சும்மாவுள் ளிருப்போர்க ளறியலாகும்
மாக்ஷியடா யிதுதானே மௌனமாகும்
மனமிறக்குங் கருவியெல்லா மொடுங்கிப்போகும்
காக்ஷியடா காண்பானுங் காக்ஷியான
காண்பொருளும் நழுவிவிடுங் கருதிப்பாரே. (14)

கருதவென்றாற் கருத்துமில்லை தானுமில்லை
கலைநாலு மெட்டினிலே சேர்ந்துபோகும்
மருவவென்று லொன்றுமில்லா வெளியதாகும்
மாசில்லாப் பூரணமா யெங்குந்தோன்றும்
நிருமலமா யுள்ளபடி நிறைந்துகாணும்
நீக்கமில்லா துறைந்திருக்கும் நிலையுந்தோன்றும்
மருவில்லாப் பொருள்தானே மிஞ்சிநிற்கும்
மைந்தனே தற்பரமா யிலகுந்தானே. (15)

தானென்ற சற்குருவி னருளினாலே
சாற்றியதோர் பதினாறு பாடல்தன்னை
கோனென்ற குருவருளா லறிந்தபேர்கள்
குறையாத பேரின்பங் கூடிவாழ்வார்
நானென்ற மொழிசொல்லார் நமனுக்கஞ்சார்
[illegible]தன்ற னருளோங்கி நன்மைசேர்வார்
[illegible]னின்ற வறுமுகவன் பாதம்போற்றிச்
செப்பியதோர் [illegible]றுஞ் சிறக்கமுற்றே. (16)

பரிபூரணானந்த ஞானம் முற்றிற்று.

17648

சிவமயம்

ஓம் பரமசற்குருவே துணை

ஞானக்கப்பல்.

ஏலேயேலோ யேலிலலோ—சம்போ—யேலே யேலோ யேலிலலோ
ஏகவெளி சேலுத்துமடா—கப்பல். (ஏலேயேலோ)

1. அஞ்சி புலன்களை யொன்றாகக் கூட்டி
யறிவென்னு மியந்திர மதனுள்ளே பூட்டி
வஞ்ச மலமென்னும் ‡ விரகதை மாட்டி
மாசின்மூ லாக்கினி தன்னையே நாட்டி
விஞ்சைமந்த் ரங்காற்று லாவியை மூட்டி
மேற்சுத்த கங்கைநீ ருள்ளுளே யூட்டிச்
செஞ்சா ணத்தாளைச் சிந்தைபா ராட்டிச்
சிதாகாச வீதியிற் செலுத்தடா கப்பல்.(ஏலேயேலோ)

2. மங்கையர் † தனமென்னும் மேடுதாக் காமன்
மருவு $நி தம்பமாங் கிடங்கிலாழ்த் தாமற்
றங்கும்பா வாதிக டடுத்து வீழ்த்தாமற்
சஞ்சல ¶ மாருதி சாடித்தாழ்த் தாமற்
சங்கற்ப விகற்பங்கள் வந்துதாக் காமற்
சந்தேக * மகரங்கள் பிரட்டிமாற் றாமற்
பங்கமுறு மாயை வழுக்கல்வீழ்த் தாமற்
பரவெளி தன்னிலே செலுத்தடா கப்பல். (ஏலே)

3. பாசபந்த மெனும் பாறைதட் டாமற்
பாதக மாம்வினை வந்துகிட் டாமல்
A வாசனைக் காற்றுக விழ்க்கவொட் டாமன்
மறப்புநி னைப்பலை வந்ததட் டாமல்
நேசநா னென்னுமு தலைதிரட் டாமல்
நிட்டூர யிருள்சூழ வருகவொட் டாமல்
தேசு விளக்கேற்றென் சொல்லைத்தட் டாமற்
சிற்சபை நாடியே செலுத்தடா கப்பல். (ஏலே)

4. இமையா நாட்டமாகச் செலுத்தடா கப்பல்
இருந்த படியிருந் தோட்டடா கப்பல்

---

‡ விரகு—ஆசை. † தனம்—கொங்கை. $நிதம்பம்—யோனி. ¶மாருதி—காற்று
* மகரம்—மீன், A வாசனை—பழக்கவாசனை.

உமையா ளருட்பற்றி நாட்டடா கப்பல்
ஒருமொழி பற்றுக்கோ டாக்கடா கப்பல்
அமைதியாய்ச் சூக்ஷ்ம தறியடா கப்பல்
ஆனந்தா தீதத்த மர்த்தடா கப்பல்
நமையாதி யுள்ளூற வாக்கடா கப்பல்
நானென்னு முனைப்பில்லா தோட்டடா கப்பல். (ஏ)

5. உளக்கண்ணை நாடியே செலுத்தடா கப்பல்
உண்மைப் பதியறிந் ‡ தொன்றடா கப்பல்
பழக்கவா சனையுள்ளே வந்துதாக் காமற்
பார்த்தானைப் பார்த்துள்ளே செலுத்தடா கப்பல்
† களக்க மனந்தன்னை யாசன மாக்கிக்
$ காலை மடித்திருந் தோட்டடா கப்பல்
வழக்கமிக் கரையுள்ள தெல்லாமும் விட்டு
¶ மாசிலக் கரையுறச் செலுத்தடா கப்பல். (ஏலே)

6. * பாசிலா நீரதி லோட்டடா கப்பல்
பதைப்பில்லா துளபடி பாய்ச்சடா கப்பல்
வாசிவா வாவென வாங்கடா கப்பல்
வாங்கியப் பரவெளி யேற்றடா கப்பல்
கூசிடாக் குருவடி போற்றடா கப்பல்
குறையாப்பே ரின்பத்திற் பரப்படா கப்பல்
மாசின்மா ளாதேமாண் டொன்றடா கப்பல்
மாளாச்சிற் ககனவெளி செலுத்தடா கப்பல். (ஏ)

7. இக்கரை யிருந்ததை யெல்லாமும் விட்டு
ஈச னருளென்னும் பற்றதைத் தொட்டு
A பொக்கெனச் சூக்ஷ்த்தைக் கண்டுசும் பிட்டு
B போத விளக்கா விருளைவி ரட்டிச்
சிக்கெனச் சுக்கானை நேர்நடு நட்டிச்
சீக்கிர மா C யகண் டத்தினை யொட்டி
அக்கரை நாடியே செலுத்தடா கிட்டி
யம்பர வீதியுள் ளமர்த்தடா கப்பல். (ஏலே)

ஞானக்கப்பல் முற்றிற்று.

‡ ஒன்றுதல்—சேருதல். †களக்கமனம்—குற்றமுள்ளமனம். $காலைமடித்து—பிராணவாயுவைஉள்மறித்து. ¶மாசுஇல்—குற்றமில்லாத. * பாசுஇல்லா—இச்சைஇல்லா. A பொக்கென—விரைவாக. B போதவிளக்கு—அறிவு. ஞானவிளக்கப்பிரகாசம். C அகண்டம்—நாமரூபமற்றவெறுவெளி.